<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 140/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ரமா | நாள் | 04.01.2025 |
| தகப்பனார் பெயர் | பச்சமுத்து | | |

<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

10) இவ்வழக்கில் நான் 1ம் வாதியாக உள்ள நிலையில், எனக்கும் தாவா சொத்திற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்றால், உள்ளது. தாவா சொத்தை பொறுத்து என் பெயரில் ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால், செட்டில்மெண்ட் ஆவணம் உள்ளது. என் பெயரில் உள்ளதா என்றால், ஆமாம். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை தற்போது நீதிமன்றத்தில் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ச.எண்.851/17 தொடர்பாக என் பெயரில் ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால், என் பெயரில் இல்லை. ஆனால் என் தந்தை பெயரில் உள்ளது. மேற்படி ச.எண்.851/17 ல் உள்ள சொத்து எங்களுடைய அனுபவத்தில் உள்ளது.

11) மேற்படி ச.எண்.851/17ன் பழைய சர்வே எண் என்னவென்றால், ச.எண்.137/2 ஆகும். ச.எண்.851/17 ஆனது, வருவாய் ஆவணங்களில் குறிப்பாக அ–பதிவேட்டில் காலி இடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால், நத்தம் மறுஅளவை திட்டத்திற்கு முன்பு மேற்படி நிலத்திற்கு என் தந்தை பெயரில் பத்திரம் உள்ளது. மேற்படி என் தந்தை பெயரில் உள்ளதாக நான் சொல்லும் பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால், தாக்கல் செய்துள்ளோம்.

12) இவ்வழக்கு சொத்து விவரத்தில் என்ன சர்வே எண் குறிப்பிட்டுள்ளோம் என்றால், ச.எண்.851/17 என்ற சர்வே எண்ணை தான் காண்பித்துள்ளோம். மேற்படி என் தந்தை பெயரில் உள்ளதாக நான் சொல்லும் பத்திரத்திற்கும், தாவா சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்ணிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல. ச.எண்.851/18 ல் எங்கள் வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி வீட்டை ஒட்டி அமைந்துள்ள காலி நிலம் சந்து பகுதி என்றால், சரியல்ல. தாவா சொத்து

விவரத்தில் வழக்கில் நான் சொல்லியுள்ள காலி நிலம் குறித்து குறிப்பாக நாங்கள் சொல்லவில்லை என்றால், சரியல்ல.

13) மேற்படி காலி நிலம் குஞ்சாண்டியூர் – கூணாண்டியூர் ரோட்டிற்கு மேற்கு பகுதியில் அமைந்துள்ளது என்றால், சரிதான். அதேபோல் எங்களது வீட்டிற்கு வடக்கு பகுதியில் உள்ளது என்றால், சரிதான். சுந்தரம் – ராஜேஸ்வரி ஆகியோர் வீட்டிற்கு தெற்காக உள்ளது என்றால், சரிதான். அம்மானி, கருங்கண்ணி, ஈஸ்வரி, கோவிந்தம்மாள், வாசுதேவன் மற்றும் பிரதிவாதி ஆகியோரது வீட்டிற்கு கிழக்கு பகுதியில் உள்ளது என்றால், ஈஸ்வரி வீட்டிற்கு மட்டும் தான் கிழக்கு பகுதியில் உள்ளது. மற்ற நபர்களது வீடுகள் அங்கு இல்லை.

14) மேற்படி அம்மானி, கருங்கண்ணி, ஈஸ்வரி, கோவிந்தம்மாள், வாசுதேவன் மற்றும் பிரதிவாதி ஆகியோர் மேற்படி காலி நிலம் வழியாகத்தான் பிரதான சாலைக்கு வர இயலும் என்றாலும், மேற்படி தடவழியை விட்டால் அவர்களுக்கு வேறு தடவழி எதுவும் இல்லை என்றாலும், சரியல்ல. மேற்படி நிலத்தை பிரதிவாதி மற்றும் இதர நபர்கள் விண்ணப்பித்து வருவாய் துறையினர் அளக்க வந்தபோது அதை நாங்கள் தடுத்ததால், என் தாயார் மற்றும் சகோதரி மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி வழக்கு மேட்டுர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் நடைபெற்று அதில் என் தாயார், தகப்பனார் மற்றும் சகோதரி அபராதம் செலுத்தினர் என்றால், சரியல்ல. மேற்படி வழக்கில் என் தாயார், தகப்பனார் மற்றும் சகோதரி ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனரா என்றால், ஆமாம்.

15) தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அரசு நிலத்தை அபகரிக்கவேண்டி, பொய்யாக இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து, எவ்வித உரிமை ஆவணங்களையும்

நாங்கள் தாக்கல் செய்யாததால் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து, அனுபவ சான்று எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. ஆனால், பத்திரம் உள்ளது.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.